அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்கள் ஏராளமான பணம் செலவழித்து மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு முன் வருவார்களானால் நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மின்ச.ர வாரியம் மேம்பாடு.

*வினா எண் 357—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மின்சார வாரியம் மேம்பாடு குறித்து மைய அரசிடமிருந்து ஏதேனும் குறிப்புகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் உற்பத்தியைப் பெருக்குதல், மின் திட்டங்களுக்கு வேண்டிய நில ஆர்ஜிதம் செய்தல், நவீன மாற்று கருவிகள் உரிய காலத்தில் தருவித்தல், தகுதியான மூலப்பொருட்களை உபயோகப்படுத்தல், வாரியத்தின் நிதி நிலமை, தொழில்முறை உறவுகளை மேம்படுத்துதல், ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு மற்றும் நிர்வாகம், தொழிலாளர் முறைப்படுத்தவும் யோசனைகள் கூறப்பட்டுள்ளன.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வ.ரியத்தை மேம்படுத்துவதற்கான பெயரால் மத்திய அரசின் யோசனைகளை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது நம்முடைய மாநிலத்தின் உரிமைகளைப் பாதிக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெறும் யோசனைகளைப் பெறுவதாலேயே மாநில அரசை அது பாதிக்கும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி 'திருக்குறளை' நினைவுபடுத்துவது போல்

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லி யவண்ணம் செயல்"

1981 மார்ச் 4]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீர்படுத்துவதற்கு மத்திய அரசு தெரிவித்த யோசனைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவற்றில் எந்தெந்த யோசனைகளை அரசு தற்போது அமலுக்குக் கொண்டு வந்து இருக்கிறது? குறிப்பாக, தொழிலாளர்கள் விஷயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய போராட்டம் நடந்தது. அதில் தலையீடும் செய்யாமல் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருக்கிறது. இங்கே வாட்டர் ரிசோர்சஸ் முடிந்து போன காரணத்தால், அதிகப்படியான புதிய தெர்மல் நிலையங்களை அமைப்பதற்கும், மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் மின் உற்பத்தியைப் பொறுத்து மட்டுமல்ல, கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நடந்த மின்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மின்வாரியம் நல்லமுறையில் இயங்க பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அது குறித்த பரிந்துரைகளை நம்முடைய அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். பாரதப் பிரதமர் அவர்களும் அதற்குப் பிறகு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவற்றிலே நாம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அதை அரசுத் தரப்பில் எடுத்து இருக்கிறோம். மற்றபடி மின் வாரியம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை அவர்களை விட்டு எடுக்கச் சொல்லியிருக்கிறோம். உதாரணமாக, மின் உற்பத்தியை எல்லாம் ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் குழுவை அந்தப் பரிந்துரை வருவதற்கு முன்பே நாம் போட்டு இருக்கிறோம். ஆகவே, பதில் எழுதுகிறபோது ஏற்கனவே அந்தக் குழுவை நாங்கள் அமைத்து இருக்கிறோம் என்று எழுதி இருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தொழிலாளர்களுடன் நல்லுறவு என்று குறிப்பிட்டார்கள். நல்லுறவு என்றும் உண்டு.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு விவரங்களைக் கூறினார்கள். மிக்க மகிழ்ச்சி. இப்போது வறட்சி எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. பாசன வசதி பாதிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு 1/2 மணி, 1/4 மணி நேரம் கரண்ட் வருகின்ற நிலை இருப்பதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒரு நாளைக்கு குறைந்தது 3 மணி நேரம் அல்லது 4 மணி நேரம் கரண்ட் தொடர்ந்து அளிப்பதற்கான ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு இது சம்பந்தம் இல்லை; என்றாலும் விரைவில் அதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டு, இந்த பேரவையில் அறிவிக்கப் படும்.

Resettlement and updating of land records in Periyakulam Taluk.

*Q. No. 358—Thiru V. R. JAYARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

Is there any proposal to have resettlement and updating of land records in Periakulam taluk, Madurai district?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் காலத்திலே பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக 'ரீ செட்டில்மென்ட் அன்ட் அப்டேட்டிங் ஆப் லான்ட் ரிக்கார்ட்ஸ்' பெரியகுளம் பகுதியில் செய்யப்பட வேண்டிய ஒன்று. தற்போது இந்தப் பணி மதுரை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் நடைபெறுகிறது? பெரியகுளம் வட்டத்திற்கும் இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டம் இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் மூன்று வட்டங்களில் நடைபெறுகிறது. மேலூர், உசிலம்பட்டி, உத்தமபாளையம் ஆகிய வட்டங்கள் அவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில அளவை மேம்பாட்டுத் திட்டம் அவர்களுடைய வட்டத்திற்கு விஸ்தரிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். விரைவிலே அந்த வட்டமும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் ரீ செட்டில்மென்ட் செய்யும்போது, கொடைக்கானல் பகுதியிலே நிறைய ஜமீன் லான்ட்ஸ் ரீ செட்டில்மென்ட் செய்யப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது; அதை ஏழை எளிய விவசாயிகள் 'ஆக்குபை' செய்து விவசாயம் செய்து வருகிறார்கள்; அதை ரீ செட்டில்மென்ட் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.